# காஞ்சியில் நடைபெற்ற கழக பவள விழா மாபெரும் பொதுக்கூட்டத்தில் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்று சிறப்பித்த காட்சிகள்!











கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.09.2024) காஞ்சிபுரத்தில் நடைபெற்ற கழகத்தின் 75ஆம் ஆண்டு பவள விழா – பல்லாயிரவர் திரண்ட மாபெரும் பொதுக் கூட்டத்தில் சிறப்புரையாற்றினார். இவ்விழாவில் பங்கேற்ற முதல்வர் அவர்களுக்கு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் – குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் மற்றும் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ ஆகியோர் நினைவுப் பரிசுகளை வழங்கினார்கள். இவ்விழாவில், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி, கழகப் பொதுச் செயலாளர் – நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கழக பொருளாளர் – நாடாளுமன்ற மக்களவைக் கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, கழக முதன்மைச் செயலாளர் – நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, கழக இளைஞர் அணிச் செயலாளர் – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கழக துணை பொதுச் செயலாளர்கள், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு.செல்வப்பெருந்தகை, ம.தி.மு.க. பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வைகோ, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் காதர் மொய்தீன், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தொல் திருமாவளவன், மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் எம்.எச். ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ., கொங்கு மக்கள் தேசியக் கட்சியின் தலைவர் ஈ.ஆர்.ஈஸ்வரன் எம்.எல்.ஏ., தமிழக வாழ்வுரிமை கட்சியின் தலைவர் வேல்முருகன் உள்ளிட்ட பல்வேறு கூட்டணி கட்சித் தலைவர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், கழகத்தின் பல்வேறு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.